தனி மனிதர்களின் சுய மரியாதைக்காக பெரியார் நின்றார் என்றால்

மாநிலங்கள் சுய மரியாதைக்காக எழுந்து நிற்க வேண்டும்!

வைக்கம் நூற்றாண்டு நிறைவு விழாவில் கேரள முதல்வர் பினராயி விஜயன் வலியுறுத்தல்!

வைக்கம், டிச.13

“தனி மனிதர்களின் சுய மரியாதைக்காக பெரியார் நின்றார் என்றால் மாநிலங்கள் சுயமரியாதைக்காக எழுந்து நிற்க வேண்டும்” என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் அவர்கள் வலியுறுத்தினார்,

வைக்கம் கடற்கரையில் தந்தை பெரியார் நினைவிடம் மற்றும் பெரியார் நூலகம் திறப்பு விழாவுக்கு முதல்வர் பினராயி விஜயன் அவர்கள் தலைமை வகித்துப் பேசியதாவது: -

ஒத்துழைப்பு என்பது வார்த்தைகளில் அல்ல, செயலில் வெளிப்படுகிறது. பொருளாதார சுயாட்சி உள்ளிட்ட மாநிலங்களின் உரிமைகள் மீது தொடர்ந்து அத்துமீறல் நடந்து வரும் இந்த நிலையில் மேலும் பல மாநிலங்களுக்கு இடையே இந்த ஒத்துழைப்பை விரிவுபடுத்த வேண்டும். வைக்கம் சத்தியாகிரகத்தில் எல்லை கடந்த சகவாழ்வையும் ஒத்துழைப்பையும் பார்த்தோம்.

கேரளாவும் தமிழகமும் அந்த சகவாழ்வையும் ஒத்துழைப்பையும் தொடர்கின்றன. தனிமனிதர்களின் சுயமரியாதைக்காக பெரியார் நின்றார் என்றால், அவர்களின் சுயமரியாதைக்காக மாநிலங்கள் எழுந்து நிற்க வேண்டும் என்று காலம் கோருகிறது. காலம் கோரும் ஒத்துழைப்பை கேரளாவும் தமிழகமும் முன்னெடுத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

அதே ஒத்துழைப்பின் மனப்பான்மை பெரியார் நினைவிடத்தைப்

புதுப்பிப்பதிலும் தெரிகிறது. வரும் காலங்களில் இரு மாநிலங்களும் அதை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெரியார் என்கிற ஈ.வெ.ராமசாமி அவர்கள், இந்தியா முழுவதும் உள்ள சமூக சீர்திருத்தவாதிகளில் முன்னணியில் இருப்பவர். ஸ்ரீ நாராயணரை கேரள மக்கள் அனைவரும் குரு என்று அழைப்பது போல, ஈ.வெ.ரா.வை தமிழர்கள் அனைவரும் பெரியார் என்று மரியாதையுடன் அழைக்கிறார்கள்.

வைக்கம் மகாதேவர் கோவிலை சுற்றியுள்ள பாதைகளில் அவர்கள் நடக்க வேண்டும் என்ற சத்தியாகிரகத்தில் பெரியார் முக்கிய பங்கு வகித்தார். பெரியாரும் பிற தலைவர்களும் நடமாடும் சுதந்திரம் மறுக்கப்பட்டதை மலையாளிகள் மட்டுமல்ல நாட்டு மக்களின் பிரச்சனையாகவே பார்த்தார்கள்.

1924 ஏப்ரல் 13, அன்று வைக்கம் சத்தியாகிரகத்திற்கு பெரியார் தலைமை ஏற்றார். இதனால் வைக்கத்தில் மக்கள் கடல் போல் திரண்டனர். திருவிதாங்கூர் நிர்வாகத்தின் அறிவுறுத்தலின் பேரில், அவர் கைது செய்யப்பட்டு ஆறுக்குற்றி சிறையில் அடைக்கப்பட்டார். தகவல் அறிந்ததும் அவரது மனைவி நாகம்மா வைக்கம் வந்தார். பெண்கள் பங்கேற்புடன் சத்தியாகிரகத்தின் முக்கியத்துவம் குறித்து பிரச்சாரம் செய்தார்.

பெண்களின் திருமண வயதை உயர்த்தவும், அவர்கள் தங்கள் கணவரைத் தேர்வு செய்யவும் விவாகரத்து செய்யவும் உரிமை பெற்றதில் பெரியாரின் தலையீடுகள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. பெரியாரின் இது போன்ற அனைத்து ஈடுபாடுகளிலும் நாகம்மாவும் சமமான பங்கேற்பாளராக இருந்தார்.

தன்னலமற்ற தலைமை பெரியார்!

ஆறுக்குற்றி சிறையில் இருந்து வெளியே வந்த பெரியார் மீண்டும் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதால், அவரை நாடு கடத்த அரசு உத்தரவிட்டது. பெரியார் உத்தரவை மீறியதால், திருவிதாங்கூர் நிர்வாகம் அவரை மீண்டும் சிறையில் அடைத்தது. மன்னர் இறந்த சந்தர்ப்பத்தில் பெரியாரும் பிற சத்தியாக்கிரகிகளும் விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு வைக்கம் சத்தியாகிரகத்திற்கு தன்னலமற்ற தலைமையை பெரியார் வழங்கினார்.

இவ்வாறு முதல்வர் பினராயி விஜயன் அவர்கள் பேசினார்.

நெல்லை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

பேரவைத் தலைவர் மு.அப்பாவு – அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு!

நெல்லை, டிச.13-

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (12.12.2024) மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர். மனோகரன் , திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் , மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், மாவட்ட கண்காணிப்பாளர் /தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் தட்சிணாமூர்த்தி, நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு, பேரூராட்சிகள் இயக்குநர் கிரண்குராலா, மாநகர காவல் ஆணையாளர் ரூபேஸ் குமார் மீனா, காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டனர்.

இக்கூட்டத்தில், பொருநை அருங்காட்சியகம் கட்டுமானப் பணிகள், மேற்கு புறவழிச்சாலை நெடுஞ்சாலை (திட்டங்கள்) துறை CRIDP திட்டம், அம்பாசமுத்திரம் புறவழிச்சாலை நெடுஞ்சாலை (நபார்டு)துறை, குலவணிகர்பரம் இரயில்வே மேம்பாலம் -நெடுஞ்சாலை (திட்டங்கள்) துறை, மணிமுத்தாறு பல்லுயிர் பூங்கா, சாசக சுற்றுலா பூங்கா, மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள், காரையாறு இரும்புப் பாலம், மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு, மானூர் கலைக் கல்லூரி கட்டடம் கட்டுமானப் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், தாமிரபரணி, கருமேனியாறு, நம்பியாறு நதிநீர் இணைப்பு திட்டப் பணிகள், மருத்துவமனைக் கட்டுமான பணிகள், முதல்வரின் முகவரி, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம், கலைஞரின் ஒருங்கிணைந்த அனைத்து கிராம வேளாண் திட்டம் என பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்), தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, வேளாண்மைத் துறை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், கல்வித்துறை, மீன்வள த்துறை, பொதுப்பணித்துறை, மருத்துவத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, போன்ற பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

தொடர்ந்து, அனைத்துத் துறை சார்ந்த பணிகளையும் காலதாமதமின்றி விரைந்து தரமானதாக முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென்றும், மாவட்டத்திற்கு தேவையான புதிய திட்டப்பணிகளையும் ஏற்படுத்தி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொண்டுவர வேண்டுமென்றும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் மாஞ்சோலை தோட்டப் பணியாளர்களுக்கு ரெட்டியார்பட்டி அடுக்குமாடி குடியிருப்பில் 16 பயனாளிகளுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான ஆணைகளை வழங்கினார்கள். மாவட்ட சமூக நலன் அலுவலகம், ஒருங்கிணைந்த சேவை மையத்தில் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக பயிற்சிகள் வழங்கப்பட்டு, 4 நபர்களுக்கு ஓட்டுநர் உரிமங்களையும், மருத்துவத்துறையின் மூலம் ஒப்பந்த அடிப்படையிலான பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டு ள்ள 10 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

வடகிழக்கு பருவமழை தொடர்ந்து மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துறை சார்ந்த அலுவலர்களும் பல்வேறு பகுதிகளை ஆய்வு செய்து கண்காணித்து வருகின்றனர். திருநெல்வேலி மாவட்டத்திற்கு பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகள் திறந்து வைப்பதற்கும், புதிய திட்டப்பணிகளை தொடங்கி வைப்பதற்கும் தமிழ்நாடு முதலமைச்சர் விரைவில் வருகை தந்து சிறப்பிக்கவுள்ளார்கள் என நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் துணை இயக்குநர் இளையராஜா, முன்னாள் சட்டமன்ற பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.சுகன்யா, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் (பொ) செல்வி.அம்பிகா ஜெயின், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் இலக்குவன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மு.சிவகுமார் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

பாகிஸ்தான் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட

தமிழ்நாட்டு மீனவர்களை விடுவிக்க - தூதரக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது!

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு – ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கடிதம்!

புதுடெல்லி, டிச. 13 -

பாகிஸ்தான் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களை விடுவிக்க தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கடிதம் எழுதியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

தமிழ்நாட்டைச் சேர்ந்த 7 மீனவர்களுடன் சேர்த்து 14 இந்திய மீனவர்கள் குஜராத்தின் போர்பந்தரில் இருந்து மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், 3.1.2024 அன்று பாகிஸ்தான் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடி இயந்திரப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.11.2024 அன்று எழுதியிருந்த கடிதத்தைச் சுட்டிக்காட்டி, “பாகிஸ்தான் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கைகள் இந்திய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக” ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் கடந்த 6.12.2024 அன்று பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில், பாகிஸ்தான் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 14 மீனவர்களையும், அவர்களது 'ஸ்ரீ வ்ராஜ் பூமி' (பதிவு எண்.INDGJ25MM3458) மற்றும் 'மந்தீப்' (பதிவு எண்.INDGJ25MM1582) பெயர் கொண்ட படகுகளையும் பாகிஸ்தான் அதிகாரிகள் 3.1.2024 அன்று சிறைபிடித்ததை அறிந்த இந்திய அரசு, கைது செய்யப்பட்ட மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க ஏதுவாக, பாகிஸ்தான் அரசின் கவனத்திற்கு இதனைக் கொண்டு சென்றுள்ளதாகவும், மீனவர்களுக்கு தூதரக அனுமதி கோரப்பட்டுள்ள நிலையில், பாகிஸ்தான் அதிகாரிகளால் இதுவரை அது வழங்கப்படவில்லை என்றும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரகம், சிறைபிடிக்கப்பட்டுள்ள 14 மீனவர்களுக்கும் விரைவில் தூதரக அனுமதி கிடைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து செய்து வருவதாகவும், மீனவர்கள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படும் வரை அவர்களது பாதுகாப்பு மற்றும் உடல்நலனை உறுதி செய்யுமாறு பாகிஸ்தானிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள், இந்திய தூதரகம் இதைத் தொடர்ந்து கண்காணித்து, மீனவர்களை முன்கூட்டியே விடுவிப்பதற்கும், தாயகம் திரும்புவதற்கும் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உயர் கல்வித் துறையின் மூலம் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள

11 அரசு பொறியியல் கல்லூரிகளில் புதிய நவீன ஆய்வகங்களை அமைக்க ரூ.12.38 கோடி நிதி!

அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தகவல்

சென்னை, டிச. 13 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உயர்கல்வித்துறையின் வளர்ச்சிக்கு பல்வேறு முத்தான திட்டங்கள்வகுத்து கொடுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கடந்த 2024 2025 ஆம் ஆண்டின் உயர்கல்வித்துறை மானியக்கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின்படி மாநிலத்தில் உள்ள 11 அரசு பொறியியல் கல்லூரிகளில் புதியநவீன ஆய்வகங்களை அமைக்க தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிதிஒதுக்கீடு வழங்கியுள்ளார்கள்.

மாணாக்கர்கள், பொருட்களின் இணைய பயன்பாடுகள் மற்றும் பிற மேம்பட்ட உட்பொதிக்கப்பட்ட அமைப்பு அடிப்படையிலான திட்டத்தை உருவாக்க காரைக்குடி மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய இடங்களில் உள்ள 2 அரசு பொறியியல் கல்லூரிகளில் பொருட்களின் இணைய ஆய்வகம் (*Internet of Things Laboratory*) அமைக்கதலா ரூ.92,10,000 வீதம் மொத்தம் ரூ.1,84,20,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள 3 அரசுபொறியியல் கல்லூரிகளில் பொருள் சேர் உற்பத்தி ஆய்வகம் அமைக்க தலா ரூ.1,16,00,000 வீதம், மொத்தம் ரூ.3,48,00,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொருள்சேர் உற்பத்தியானது (*Additive Manufacturing*) பொருள் கழிவுகள், சரக்கு மற்றும் பல்வேறு வகையான தொகுப்பு செயல்பாடுகளை குறைக்க உறுதியளிக்கிறது. இந்த மையம் தொழில்துறை, அரசு மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்து ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஒருங்கிணைத்து நிலையான தயாரிப்புகளுக்கான மேம்பாடு, குறைந்த செலவில் அதிக உற்பத்தித்திறனைக் கொண்டிருப்பது, தொடர்புடைய கல்விமற்றும் பயிற்சியை ஆதரிப்ப துமற்றும் பல நோக்கங்களைக்கொண்டுள்ளதாகும்.

செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரனியல் தொழில்நுட்ப ஆய்வகங்கள்,மாணாக்கர்களின் திறமைகளை வளர்ப்பதிலும், திறமையான மனிதவளத்தினை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே கோயம்புத்தூர், சேலம் மற்றும் பர்கூர் ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியல் கல்லூரிகளில் செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரனியல் ஆய்வகம் அமைக்க தலா ரூ.1,31,87,975 வீதம் மொத்தம் ரூ.3,95,63,926நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வகம், மாணாக்கர்களுக்கு பலவிதமான பயிற்சி திட்டங்கள், பட்டறைகள் (*Workshops*) மற்றும் படிப்புகளை வழங்கும்.

மின்சார வாகன வடிவமைப்பு மற்றும் மேம்பாடு, மோட்டார் மற்றும் மோட்டார் கட்டுப்பாடு, மின்சார வாகன மின்கலன்கள் மற்றும் மின்கல மேலாண்மை அமைப்புகள், மின்னேற்றி, உட்பொதிக்கப்பட்ட அமைப்புகள், பொருட்களின் இணையம் மற்றும் தானியங்கி வாகன மின்னணுவியல் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை துரிதப்படுத்த, திருநெல்வேலி, தருமபுரி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள 3அரசு பொறியியல் கல்லூரிகளில் மின்சார வாகன தொழில்நுட்ப ஆய்வகம் அமைக்க தலா ரூ.1,03,33,910 வீதம், மொத்தம் ரூ.3,10,01,730 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,

இதன்மூலம்தமிழ்நாட்டில் உள்ள 11 அரசு பொறியியல் கல்லூரிகளில் அப்பகுதியில் உள்ள மாணவர்களின் தேவையினை பூர்த்தி செய்ய இந்த புதிய நவீன ஆய்வகங்கள் அமையும் என்பதில் ஐய்யமில்லை. இவற்றை அமைக்க மொத்தம் ரூ.12.38 கோடி நிதி ஒதுக்கி தமிழ்நாடு அரசு அரசாணைகள் வெளியிட்டுள்ளன.

இவ்வாறு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி.முன்னிலை

சென்னை கிழக்கில் மனித நேய உதயநாள் புகழரங்கம்!

அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் - தே.சிலம்பரசன் - ச.பேரரசன் சிறப்புரை!

சென்னை, டிச. 13 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம் 22,உதயத்தின் எழுச்சி! உலகத்தின் மகிழ்ச்சி!எனும் தலைப்பில்மாபெரும் புகழரங்கம் நாளை (14.12.2024 சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, ஏழுகிணறு, குளோப் திருமண மண்டபத்தில்நடைபெறுகிறது.

விழாவில், பகுதி துணை அமைப்பாளர் பி.செந்தில்குமார் தலைமை வகிக்கிறார். மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி, எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, இரா.நரேந்திரன், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், ப.ஸ்ரீராமுலு எம்.சி, இசட்ஆசாட் எம்.சி, என்.பி.எம்.சேக் அப்துல்லா, டி.லோகேஷ், பா.ஜெகதீஷ், எம்.இப்ராஹிம்கனி, இரா.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எம்.வினாயகம், பா.பிர தீப்குமார், எல்.சம்பத்குமார், ஜே.பாலமுருகன், க.வினோத், ஜி.ஜே.பிரபு, எஸ்.தனசேகர், R.D.சங்கர்நானா முன்னிலை வகிக்கின்றனர். வி.எல்.யஷ்வந்த், எம்.எஸ்.அசாருதீன், எ.சுமன்ராஜ், கே.பாலாஜி, எஸ்.இம்ரான்கான், டி.பிலிப்ஸ், பி.விஷ்ணு, எ.திருப்பதி, கே.சூரியபிரகாஷ், என்.மோகன், எ.ஆனந்த், எம்.சண்முகசுந்தரம், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், மே.ஜனார்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துகுமார், த.கதிரவன், எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், டி.சதீஷ்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் செங்கல்பட்டு தே.சிலம்பரன் அவர்கள் “இளைஞர் படை எழுதும் விடை” எனும் தலைப்பிலும், காஞ்சிபுரம் ச.பேரரசன் அவர்கள் “கதிரொளியின் பேரொளி களமாடும் போராளி” எனும் தலைப்பிலும் சிறப்புரை யாற்றுகின்றனர்.

மேலும், மேயர் ஆர். பிரியாராஜன், ப. தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, மணிமுடி, வே.உமாகாந்த், கே.எஸ்.எம்.நாதன், கே.சந்துரு, சங்கரிநாராயணன், கோ. ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராசன் எம்.சி, பி.கே.மூர்த்தி எம்.சி, கூ.பி.ஜெயின் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராஜன் எம்.சி, சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், எம்.டி.ஆர்.நாகராஜ், டி.எஸ்.பி.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வே.வாசு, கோ.மணி, எஸ்.பன்னீர் செல்வம், டி.வி.செம்மொழி எம்.சி, பி.ஜெ.துளசிங்கம், சாவித்திரி வீரராகன், அ.நிர்மலாதேவி, பி.உதயசங்கர், உமேஷ்(எ) நீலகண்டன், டாக்டர்.எ.பி.பூர்ணிமா. வானவில் விஜய், நா.துலுக் காணம், எல்.பி.எப்.மோகன், புரசை ஜி.தாமோதரன், எம்.பெரோஸ்கான், சுதாதீனதயாளன் எம்.சி, டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி, பரிதிஇளம்சுருதி எம்.சி, துரைகண்ணன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜ்முகமது, து.ஆயிரம், ஆர்.எஸ்.சித்திக். தாஹா எல்.நவீன், வெ.பரிமளம், ராஜேஷ்ஜெயின் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ. அஸ்லாம் நன்றி கூறுகின்றனர்.



வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நேற்று (12.12.2024) பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, தலைமைப் பொறியாளர் (பொது) எஸ்.ராஜேந்திரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சென்னை – கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில் மிகவும் குறுகிய காலத்தில், 5020 அறுவை சிகிச்சைகளும், இருதய சிகிச்சைகள்(ஆஞ்சியோ,ஸ் டன்ட் மற்றும் பேஸ் மேக்கர் பொருத்துதல்) 1683 பேருக்கு முடிவுற்று மாபெரும் சாதனை படைக்கப்பட்டுள்ளதை அடுத்து, அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.